பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் ஜவுளிப் பூங்காக்கள்.



# 55 இடம் பொருள் கலைஞர்






# ஜவுளிப் பூங்காக்கள்

## தொழில் முன்னேற்றத்தின் 360 டிகிரி பார்வை!

‘ஆள் பாதி, ஆடை பாதி’ என்பார்கள். அணிந்திருக்கிற ஆடையை வைத்து மனிதர்களை எடைபோடும் வழக்கம், தொன்றுதொட்டு இருந்து வருகிறது. காலத்துக்கேற்றபடியும், இடத்துக்கு ஏற்றபடியும் உடை அணியாமல் போனால், பல வாய்ப்புகளை நழுவ விட்டுவிடுகிற சூழல் ஏற்படக் கூடும். அதனால்தான் மனிதர்களின் மிக அடிப்படையான தேவைகளின் வரிசையில், உணவுக்கு அடுத்து உடையை வைத்தார்கள், பொருளாதார மேதைகள்.

தமிழ்நாட்டில் உழவுக்கு அடுத்து மிக அதிகமானோர் சார்ந்திருக்கும் தொழில் என்றால், அது ஜவுளித் தொழில்தான். கைத்தறி நெசவு, விசைத்தறி நெசவு, ஆயத்த ஆடை என பலவாறாக ஜவுளித் துறை செழித்திருக்கும் மாநிலங்களில் ஒன்று தமிழ்நாடு. விவசாயம், வாகனம், கட்டுமானம் என தொழில்நுட்பம் சார்ந்த ஜவுளித் தயாரிப்பு மட்டும் இங்கே 12 வகைகளாக இருக்கின்றன.

கோவை, திருப்பூர், ஈரோடு, கரூர், நாமக்கல் ஆகிய மேற்கு மாவட்டங்கள் தவிர, மதுரை, தூத்துக்குடி உள்ளிட்ட தென் மாவட்டங்களும் ஜவுளித்துறையில் அழுத்தமாகக் கால்பதித்துள்ளன. ஜவுளித் துறையில் தமிழ்நாடு காட்டும் ஈடுபாட்டால்தான், இந்தியாவால் வங்கதேசத்துடன் இந்தத் தொழிலில் போட்டியிட முடிகிறது.

இப்படிப்பட்ட ஜவுளித் துறைக்கு, இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாட்டில்தான் 1997 இல் ‘ஜவுளிக் கொள்கை’, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது ஆட்சியில் கொண்டு வரப்பட்டது.

### நவீன ஜவுளிப் பூங்காக்கள்

2005 ஆம் ஆண்டு வரை கலைஞர் அவர்கள், கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களின் முன்னேற்றத்துக்காகப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார். குறிப்பாக, தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட வேட்டி, சேலைகள் மட்டுமே இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தில் வழங்கப்படும் என்று மாற்றம் கொண்டு வந்தார். மேலும், இலங்கைத் தமிழ் அகதிகள், முதியோர் உதவித் தொகை பெறுவோர் ஆகியோருக்கும் அந்தத் திட்டத்தை விரிவாக்கினார்.

**அண்ணாவுக்கு காஞ்சியில்... தம்பிக்கு ஆரணியில்...!**

2009 செப்டம்பர் 26 அன்று, காஞ்சிபுரத்தில் நடைபெற்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவின் போது, காஞ்சிபுரத்தில் வசிக்கும் பட்டு நெசவாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, ‘காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு கைத்தறிப் பட்டுப் பூங்கா’ அமைக்கப்படும் என்று அறிவித்தார். இது இந்தியாவின் இரண்டாவது கைத்தறி பூங்காவாகும்.


இப்போது இந்த ஆண்டு தனது நூற்றாண்டைக் கொண்டாடும் ‘தம்பிக்கு’, ‘கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு நினைவு கைத்தறிப் பட்டுப் பூங்கா’ ஒன்று, ஆரணியில் அமைக்கப்படும் என்று ‘திராவிட மாடல் அரசு’ அறிவித்துள்ளது.

இதுதவிர, நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம், காப்பீட்டுத் திட்டம், ஓய்வூதியத் திட்டம், நெசவாளர் நல வாரியம் எனப் பல முன்னெடுப்புகளை கலைஞர் அவர்கள் மேற்கொண்டார். இந்த சமயத்தில்தான், 2005 இல் ஒன்றிய அரசு, ஜவுளித் தொழிலின் வளர்ச்சியினைக் கருத்தில் கொண்டு, ஜவுளித் தொழிலில் உலகத் தரத்துடன் கூடிய உட்கட்டமைப்பு வசதிகளை ஒரே இடத்தில் ஏற்படுத்தும் வகையில் ‘ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டம்’ என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

எப்போதும் புதிய தொழில்நுட்பங்களையும், நவீன முயற்சிகளையும் வரவேற்று ஆரத்தழுவிக் கொள்ளும் கலைஞர், ஜவுளித் துறையை மேம்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைதான், ஜவுளித் தொழில் கொழிக்கும் பகுதிகளில் ஜவுளிப் பூங்காக்களை ஏற்படுத்தியது..!

ஒன்றிய அரசு அறிமுகப்படுத்திய திட்டத்தை, சற்றும் தாமதிக்காமல் அதை தமிழ்நாட்டுக்குக் கொண்டு வந்தார் கலைஞர். அதன் பலனாக, 2006 முதல் 2010 ஆம் ஆண்டு வரை, ‘குமாரப்பாளையம் உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா’

கடலூர் ‘சைமா’(SIMA) பதனிடும் பூங்கா, ‘தேனி வைகை உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா’, ‘காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு கைத்தறிப்பட்டுப் பூங்கா’, ‘ஈரோடு விசைத்தறி பெருங்குழுமம்’ ஆகிய 7 திட்டங்களுக்கு ரூ.814.50 கோடி திட்ட மதிப்பில் ரூ.28.54 கோடி அரசு மானியத்துடன் ஏறத்தாழ 1,46,200 பேருக்கு வேலைவாய்ப்புகள் வழங்கும் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு அனுமதி அளித்தது.



### மனிதவளத்தைப் பெருக்குதல்

ஜவுளிப் பூங்காக்களைக் கொண்டு வந்ததுடன், கலைஞர் நின்றுவிடவில்லை. இந்தத் துறையில் வருங்காலத்தில் ஏற்படவிருக்கும் மனிதவளத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் அவர் திட்டங்களைத் தீட்டினார். இந்தியாவில் ஆடை அலங்காரத் தொழில்நுட்பக் கல்வியை மேம்படுத்துவதற்காக, ஒன்றிய ஜவுளி அமைச்சகத்தின் ‘தேசிய ஆடை அலங்காரத் தொழில்நுட்ப நிறுவனம்’ (நேஷனல் இன்ஸ்டியூட் ஆஃப் பேஷன் டெக்னாலஜி) ஏற்கெனவே, சென்னையில் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில், நாட்டின் ஜவுளி வரைபடத்தில் கோவை மாவட்டத்துக்கு உள்ள முக்கியத்துவத்தைக் கருதி, அந்த அமைச்சகம், தமிழ்நாட்டில் தனது இரண்டாவது கிளையை ரூ.20 கோடி திட்ட மதிப்பில் கோவையில் அமைக்கத் தொடங்கியது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்ட கலைஞர், அந்தத் திட்டத்துக்கு முதல் தவணையாக ரூ.5 கோடியை 2010 செப்டம்பர் 30 அன்று வழங்கினார்.

### சுற்றுச்சூழலுக்கு முக்கியத்துவம்

ஜவுளித் துறையில் நவீனத்தைப் புகுத்த ஜவுளிப் பூங்காக்கள், அந்தத் துறையில் மனித வளத்தைப் பெருக்க கல்வி நிறுவனம் ஆகியவற்றோடு, அந்தத் தொழிற்சாலைகளால் ஏற்படும் சூழல் மாசுபாட்டைக் குறைக்கவும் தடுக்கவும் நடவடிக்கைகள் மேற்கொண்டது கலைஞர் அரசுதான்.

பின்னலாடைத் தொழிலில் முக்கியப் பங்கு வகிக்கும் திருப்பூர் உள்ளிட்ட நகரங்களில் இருக்கும் சாயத் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் மாசு பட்ட சாயக் கழிவுநீரைச் சுத்திகரிக்க, முதன்முதலில் பொது சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அடித்தளமிட்டது கலைஞர்தான். அந்தத் திட்டத்துக்காக ரூ.120 கோடி நிதியுதவி வழங்கப்படும் என்று கலைஞர் அறிவித்தார். அத்துடன் நில்லாமல், அவர் கொடுத்த அழுத்தம் காரணமாக அன்றைய ஒன்றிய நிதியமைச்சர் 2010-2011 நிதிநிலை அறிக்கையில், இந்தத் திட்டத்துக்காக தமிழ்நாட்டுக்கு ரூ.200 கோடி வழங்கப்படும் என்று அறிவித்தார்.

அதேபோல, இந்தப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், சுத்திகரிக்கப்பட்ட சாயக் கழிவுநீரினை 350 கிலோ மீட்டர் நீளத்துக்குக் குழாய் மூலம் கொண்டு சென்று கடலில் கலக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் கலைஞர் அவர்கள் அறிவித்து, தேசிய கடல்சார் நிறுவனம் உள்ளிட்ட அமைப்புகள் மூலம் இது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளவும், முதல் தவணையாக ரூ.1.25 கோடியை ஒதுக்கினார்.

இவ்வாறு, ‘ஜவுளிப் பூங்கா’ என்று தொழில் துறையை பொருளாதாரக் கண்ணோட்டத்தோடு மட்டும் வளர்க்காமல், அதனுடன் இணைந்த மனிதவளம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்றவற்றையும் 360 டிகிரி கோணத்தில் யோசித்ததால்தான் நாம் கலைஞரை, ‘நவீன தமிழ்நாட்டின் சிற்பி’ என்று அழைக்கிறோம்..!

...வலம் வருவோம்

## ‘ராம ராஜ்ஜியத்தில்’ பெண்களின் பாதுகாப்பு?

‘அயோத்தியில் ராமர் கோயிலைக் கட்டிவிட்டோம்’ என ஆர்ப்பரிக்கும் பா.ஜ.க.வினர், அயோத்தி அமைந்திருக்கிற மாநிலமான உத்தரப் பிரதேசத்தில் பெண்களின் பாதுகாப்பு நிலை என்னவாக இருக்கிறது என்பதைப் பற்றி விவாதிக்க முன்வர வேண்டும்.

தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தின் தரவுகளின்படி, 2022 ஆம் ஆண்டில் நாட்டிலேயே உத்தரப் பிரதேசத்தில்தான் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மிக அதிகமாக நடந்திருக்கின்றன. கொலை, கொள்ளை, கடத்தல், பாலியல் வன்கொடுமை, கூட்டுப் பாலியல் வன்கொடுமை என 65,743 சம்பவங்கள் பெண்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டிருக்கின்றன.

இது 2020 ஆம் ஆண்டில் 49,385 ஆகவும், 2021 ஆம் ஆண்டில் 56,083 ஆகவும் இருந்திருக்கின்றன. பா.ஜ.க. சாமியார் யோகி ஆதித்யநாத் ஆட்சியில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக்கொண்டு தான் இருக்கின்றன என்பதை, ஒன்றிய அரசின் புள்ளிவிவரங்களே காட்டுகின்றன.

அதேவேளையில் இந்தியாவிலேயே பெண்களுக்குப் பாதுகாப்பான நகரமாக சென்னை இருக்கிறது என்பதையும் தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தின் தரவுகள் உறுதி செய்கின்றன. 2022 ஆம் ஆண்டில் சென்னையில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக 736 வழக்குகள் மட்டுமே பதிவாகியிருக்கின்றன. முந்தைய ஆண்டில் இந்த எண்ணிக்கை 874-ஆக இருந்திருக்கிறது.

## :ப்ளாஷ்பேக்



### கைகொடுக்கும் படம்!

1977 ஆம் ஆண்டு முதல் கழகப் பணியில் என்னை ஈடுபடுத்திக்கொண்டாலும், தலைவர் கலைஞர் அவர்களுடன் 1986-இல் தான் முதன்முதலாகப் புகைப்படம் எடுக்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது, நான் ஈரோடு 11-வது வட்ட தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளராக இருந்தேன். கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். கல்லூரி மாணவர்களிடமும், ஆசிரியர் பெருமக்களிடமும் அண்ணா அறிவாலயம் கட்டட நிதியாக பத்தாயிரம் ரூபாயை வசூலித்து, மாவட்டக் கழகத்தில் வழங்கினேன். அதற்கான சான்றிதழ் ஒன்றை தலைவர் கலைஞர் வழங்கினார். அப்போது, ‘நான் உங்களுக்கு கை கொடுப்பது போல் புகைப்படம் எடுக்க விரும்புகிறேன்’, எனக் கேட்டு, அவரும் ‘சரி’ எனச்சொல்லி எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.



செந்தில்குமார்

**-ஆ.செந்தில்குமார்,**
**மாவட்டத் துணைச்செயலாளர்,**
**ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கொடியேற்று விழாக்கள்!

**1954, 1955 ஆம் ஆண்டுகளில் திருச்சியில் கழகத்தின் வளர்ச்சி நெருக்கடியாக இருந்தது. அண்ணா வருந்தினார். கூட்டம் நடத்துவதற்கு அழைத்தவர்களிடம் ‘கலைஞரை வைத்து கூட்டம் நடத்தி, கழகத்துக்கு உயிர் இருப்பது தெரிந்தால், வருகிறேன்’ என அனுப்பி வைத்தார். அடுத்தடுத்த வாரங்களில் திருச்சியில் 50 இடங்களில் கலைஞர் கொடியேற்றி, ஐந்தாறு கூட்டங்களில் பேசினார். கலைஞரை வாகனம் ஒன்றில் வைத்து 50 இடங்களுக்கு ஊர்வலம் விட்டனர். மற்ற ஊர்களுக்கும் அது பரவியது. சேலத்தில் 60 கொடி, கோவையில் 70 கொடி என அடுத்தடுத்து நிகழ்ச்சிகள் ஏற்பாடாகின. கொடியேற்று விழாக்கள் புதிய பிரச்சார உத்தி ஆயிற்று.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 375




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131